**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22–ஆம் தேதி வெள்ளிக்கிழமை**

**நி.ம.எண்.31/2023 in அ.வ.எண்.13/2009**

1. மருதநாயகம் (இறப்பு)
2. மயில்வாகனம்
3. சுபலெட்சுமி
4. பானுமதி
5. சேகர் . . . மனுதாரர்கள்/ வாதிகள்

**/எதிர்/**

1. முத்துச்சாமி
2. மாணிக்கம்
3. நடராஜன்
4. ராஜலெட்சுமி
5. துணைபதிவாளர், கூட்டுறவு சங்கம், கரூர் . . . எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் இம்மனு கட்டளை 21 விதி 22, 35–ன் படி, கடந்த 21.01.2019–ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையின் படி, நிறைவேற்று மனு சொத்தை மனுதாரர்கள் வசம் சுவாதீனம் கொடுக்க உத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 26.04.2023 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 04.08.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 22.08.2025 |
| மனுதாரர்கள்/வாதிகளுக்காக | : | திரு.T.ரத்தினம் –வழக்கறிஞர் |
| ஒன்று, மூன்று எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிக்காக | : | நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள். |

இரண்டாவது எதிர்மனுதாரர்/
பிரதிவாதிக்காக : திரு.R.கிருஷ்ணசாமி–வழக்கறிஞர்

நான்காம் எதிர்மனுதாரர்/
பிரதிவாதிக்காக : திரு.K.விஜயகுமார் – வழக்கறிஞர்

**1) மனுவின் சுருக்கம்:–**

ஒன்று, இரண்டு மனுதாரர்கள்/ஒன்று, இரண்டு வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு தாக்கல் செய்து, கடந்த 20.12.2011–ம் தேதி அன்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு கடந்த 21.01.2019–ம் தேதி அன்று இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையின் படி மனு சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க வேண்டி, மனுதாரர்களால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரின் உரிமைகள் மற்றும் பங்கு பாத்தியங்களை பொருத்து நடவடிக்கை எடுக்கும் உரிமையை ரிசர்வ் செய்து கொள்கிறார். இறுதிநிலை தீர்ப்பாணை நடவடிக்கை பொருத்தும், நிலங்களை அளக்கும் போது, இந்த எதிர்மனுதாரருக்கு சட்டப்படியான அறிவிப்பு அனுப்பப்படவில்லை. மனுதாரருக்கு சுவாதீனப் பரிகாரம் கிடைக்காது என்பதால் மனுதாரரின் மனுவினை இந்த எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரியுள்ளார்.

3). நான்காம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5). தீர்வு :-**

**(அ)** இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. ஒன்று, இரண்டு மனுதாரர்கள்/ஒன்று, இரண்டு வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு தாக்கல் செய்து, கடந்த 20.12.2011-ம் தேதி அன்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு கடந்த 21.01.2019-ம் தேதி அன்று இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையின் படி மனு சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க வேண்டி, மனுதாரர்களால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு சங்கதிகளை ஆட்சேபனை செய்து இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணைகளை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதாக எவ்வித வாதமும் மேற்கொள்ளவில்லை. மேலமை நீதிமன்றங்களில் இருந்து அசல் வழக்கின் தீர்ப்பாணையை நிறுத்தி வைக்கக் கோரியோ, மேற்படி தீர்ப்பாணையை நசித்து விட்டதாக கூறியோ எவ்வித அறிவிப்பும் இந்நீதிமன்றத்தால் பெறப்படவில்லை. மனுதாரர் தீர்ப்பின் பலனை பெறுவதற்கு தகுதி உடையவராவார். எனவே, மனு சொத்துக்களை மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க வேண்டியது அவசியமாகும் என முடிவு செய்யப்படுகிறது.

**6). முடிவாக,** மனு சொத்தினை எதிர்மனுதாரர்கள் சுவாதீனம் கொடுக்க உத்தரவிடப்படுகிறது. சுவாதீனத்திற்கு படி செலுத்த கால அவகாசம் 5 நாட்கள். **அழைக்க வாய்தா : 25.9.2025.**

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–**இல்லை.

ஒப்பம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.